செ.வெ.எண்.275/2009/செமதொஅ நாள்: 03.09.2009

**ஏழை-எளிய மக்களின் உயிர் காக்க கொண்டு வரப்பட்ட திட்டம் தான் கலைஞர் காப்பீட்டு திட்டமாகும் - மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் பேச்சு.**

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஒரத்தூர் ஊராட்சியில் இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்பு, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு 85 பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்பும், 628 பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியும், 17 கர்ப்பணி தாய்மார்களுக்கு தலா ரூ.6 ஆயிரம் வீதம் உதவித் தொகை வழங்கி பேசியதாவது,

“ மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவித்த அனைத்து வாக்குறுதிகளும் 100 சதவீதம் நிறைவேற்றி உள்ளார். இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, இலவச சமையல் எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்பு, ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, இலவச வீட்டுமனைப் பட்டா, மானிய விலையில் மளிகைப் பொருட்கள், மாணவர்களுக்கு சத்துணவுடன் வாரம் 3 முட்டை, படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை, ஏழை மக்களின் உயிர் காக்கும் கலைஞர் காப்பீட்டுத் திட்டம், 3.5 லட்சம் இளைஞர்களுக்கு அரசுப் பணி போன்ற சீரிய திட்டங்களை தீட்டி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 44 ஊராட்சிகளில் 25 ஊராட்சிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு விட்டன. மீதமுள்ள 19 ஊராட்சிகளுக்கு இன்னும் ஆறு மாத காலத்திற்குள் வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஒரு கோடி குடும்பங்கள் மருத்துவ காப்பீடு பெறும் வகையில் உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டு திட்டம் என்ற புதிய திட்டத்தினை கொண்டு வந்துள்ளார். இந்தியாவிலே தமிழகத்தில் தான் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அமைப்பு சாரா தொழிலாளர்கள் மற்றும் ஆண்டு வருமானம் ரூ.72 ஆயிரத்திற்கு குறைவாக உள்ள அனைவரும் உறுப்பினராக சேர்ந்து பயன் பெறலாம். இத்திட்டத்திற்கான பிரீமியத் தொகை ரூ.570 கோடியை தமிழக அரசே வழங்கி உள்ளது. இதன் மூலம் ஏழை, எளிய மக்கள் இருதய நோய், சிறுநீரக நோய் போன்ற 51 நோய்களுக்கு தனியார் மருத்துவமனைகளில் சேர்ந்து ரூ.1 லட்சம் வரை சிகிச்சை பெற்று பயன் பெறலாம். தகுதியுடைய பொதுமக்கள் அனைவரும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறவேண்டும்.

ஒரத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் இந்த பகுதிக்கு பேருந்து வசதி செய்து தரவேண்டும் என கோரிக்கை வைத்தார். இந்த பகுதி சாலையினை சீரமைத்த பின்பு ஒரத்தூர் வழியாக திருவந்தூருக்கு புதிய பேருந்து விரைவில் இயக்கப்படும். பொதுமக்களிடமிருந்து எந்த விதமான கோரிக்கை வந்தாலும் அதனை உடனடியாக நிறைவேற்றுகின்ற அரசுதான் கலைஞரின் அரசு.” என கூறினார்.

அதனைத் தொடர்ந்து, காவனூர் ஊராட்சியில் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க விழா நடைபெற்றது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு காவனூர்-தியாகராய நகருக்கு புதிய பேருந்தினை கொடியசைத்து தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றினார்.

“ காவனூர் ஊராட்சி பொதுமக்கள் சாலை வசதி, குடிநீர் வசதி மற்றும் பேருந்து வசதி செய்து தர வேண்டும் என நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பு கோரிக்கை வைத்தார்கள். அதற்கு உடனடியாக தீர்வு கண்டு சாலை வசதியும், குடிநீர் வசதியும் செய்து தரப்பட்டன. இன்றைய தினம் கூடுவாஞ்சேரி, தாம்பரம் வழியாக தியாகராய நகருக்கு புதிய பேருந்து இயக்கப்பட்டுள்ளது.

கடந்த கால ஆட்சியில் பணி நியமன தடைச்சட்டத்தினால் 3.5 இலட்சம் அரசு காலி பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றப் பிறகு பணி நியமன தடையாணை நீக்கப்பட்டு 3.5 இலட்சம் அரசு காலி பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. தமிழகம் முழுவதும் அரசு போக்குவரத்து கழகங்களில் நடத்துனர் மற்றும் ஓட்டுநர்களாக 25 ஆயிரம் பேர் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர். புதிதாக 10 ஆயிரம் பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன." என்று தெரிவித்தார்.

இவ்விழாவில் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.டி.யசோதா, மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திரு.ஆ.மனோகரன், மாநகர் போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் திரு.வி.பால்ராஜ் ஆகியோர் முன்னிலையுரையாற்றினர். முன்னதாக விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் ஒரத்தூர் ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.கிருஷ்ணவேணி தாவீது வரவேற்றார். நிறைவாக ஊராட்சி துணைத்தலைவர் திருமதி பூங்குழலி மனோகரன் நன்றி கூறினார். மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் திரு.மு.ராகவன், திருமதி.ரீட்டா செல்வசீமான், குன்றத்தூர் ஒன்றியக்குழு துணைத்தலைவர் திருமதி.சுஜாதா பாஸ்கரன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திரு.டி.ஏழுமலை, திரு.ஏ.எஸ்.கிருஷ்ணமூர்த்தி காவனூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.மா.முருகன், ஊராட்சி மன்றத் துணைத்தலைவர் ஏ.நடராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.கே.சசிகலா, திருமதி.நாகரத்தினம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.